1982 ஏப்ரல் 2

மண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, அந்தத் திட்டம் மேலும் ஆய்வு செய்யப்பட்டு இப்போது 25 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக செலவாகும் என்று கருதப்படுவதால் அதை ஒரு நடுத்தரப் பாசனத் திட்டமாக திரும்பவும் ஆய்வு செய்வதற்கு வேறு ஒரு பிரிவுக்கு மாற்றப்பட்டு, மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நடுத்தரத் திட்டமாக ஆய்வு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். கடந்த 10 ஆண்டுக் காலமாக வெள்ளக் காலத்தில் அந்தத் தண்ணீர் எல்லாம் கடலுக்கு வீணாகப் போகிறது. இது நீண்ட காலமாக இருப்பதால் உடனடியாகச் செய்ய அரசு முன்வருமா? நடுநிலைத் திட்டமாகச் செய்தால் வெள்ளக் காலத்தில் அதிகமாக வரும் தண்ணீரை பக்கத்தில் இருக்கிற கண்மாய்களுக்கு திருப்பிவிட வசதி இருப்பதால் அரசு இதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, அந்த அடிப்படையில்தான் முதலிலே ஆய்வு செய்து அணையைக் கட்டலாம் என்ற முடிவுக்கு வந்தபோது இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் தொழுதூர் ரெகுலேட்டர் மற்றும் வெல்லிங்டன் பாசன ஏரிக்கு நீரின் வரத்து சுமார் 250 கன அடி குறைந்துவிடும் என்றும் அதனால் விவசாயம் பாதிக்கும் என்றும் அந்தப் பகுதி விவசாயிகள் ஆட்சேபம் தெரிவித்தார்கள். இருந்தாலும் அது பற்றி ஆய்வு செய்து, இப்போது ஏப்ரல் மாதத்திற்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதாவது இன்னும் சுமார் 30 நாட்களுக்குள் முடிந்துவிடும். அறிக்கை வந்தவுடன் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

சென்னைக்கு கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர்
கொண்டுவரும் திட்டம்.

* வினா எண். 729— திரு. பெ. சு. திருவேங்கடம்: திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு சார்பில் ஆந்திர பிரதேச முதல்வர் அவர்களை சந்தித்து சென்னைக்கு கிருஷ்ணா ஆற்று தண்ணீரைக் கேட்டு பேச்சு வார்த்தை நடந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ): 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஆந்திர மற்றுந் தமிழக முதல்வர்களிடையே இத்திட்டத்தின் ஆய்வு வேலைகள், திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆய்வுப் பணிக்காக இரு மாநிலங்களும் நிதி ஒதுக்குவது பற்றி பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இக்கூட்டத்தில் தீர்மானித்தபடி இரு மாநிலங்களிலும் ஆய்வு வேலைகள் தொடங்கப்பட்டன. தமிழக எல்லைக்குள் ஆய்வு வேலை முடிந்துவிட்டது. ஆந்திர

1982 ஏப்ரல் 2]

எல்லைக்குள்ளும் அநேகமாக ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டன. தோராயமாக திட்ட அறிக்கை ஒன்றை தமிழக அரசு ஆந்திர அரசுக்கு அனுப்பியுள்ளது. இறுதி திட்ட அறிக்கை ஆந்திர அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, தமிழக எல்லைக்குள் ஆய்வு வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதைப்போன்று ஆந்திர அரசுக்கு ஆய்வு அறிக்கையை அனுப்பியிருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். இதற்கு எவ்வளவு தொகை செலவாகும்? சென்னைக்கு இந்தத் தண்ணீர் வந்து சேர எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, ஆய்வு வேலைகள் முடிந்துவிட்டன. ஆய்வுப்பணிக்குத் தேவையான பங்குத் தொகையில் ஏறத்தாழ 90 சதவீதத்தை வழங்கிவிட்டோம். ஏறத்தாழ இதற்கு 188 கோடி ரூபாய் ஆகும் என்று இப்போது மதிப்பீடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரைவிலே செய்து முடிக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கலாம் என்று அறிவித்தார்கள். அதில் ஏதாவது காலம் குறிக்கப்பட்டுள்ளதா? அப்படி அந்தத் தண்ணீர் சென்னைக்கு வரும்போது, சென்னைக்குத் தேவையான தண்ணீர் அதன் மூலம் கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, பொதுவாக இத்திட்டத்தை முடிக்க 5 முதல் 7 ஆண்டுகள் ஆகும் என்று எதிர்பார்க்கிறோம். விரைவாக தண்ணீரைக் கொண்டுவந்து சென்னையின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று அரசு முயற்சி செய்கிறது. அந்த முயற்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்ட வேண்டும். இன்னும் விரைவாக முடிக்க வாய்ப்பு இருந்தால் அதையும் கவனத்தில் கொண்டு செயல்படுத்துவோம்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, சென்னைக்கு கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைக் கொண்டுவருவது சம்பந்தமாக 1978-ல் பேச்சு வார்த்தை நடந்ததாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. அங்கே இருக்கிற அரசாங்கத்தில் பல முதலமைச்சர்கள் இந்த இடைப்பட்டக் காலத்தில் வந்து சென்றுவிட்டார்கள். அதனால் ஏதாவது சிக்கல் இருக்கிறதா? அப்படி சிக்கல் இருக்குமானால் மத்திய அரசோடு பேசி, நேரடியாக இது பற்றி பேசி, இதை விரைவாக செய்து முடிப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 ஏப்ரல் 2

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, முதலமைச்சர்கள் மாறுவதாலோ அல்லது சென்று விடுவதாலோ அரசு செயல்படாமல் நின்றுவிடுவது இல்லை. அரசு இயந்திரம் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, விரைவாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்பதிலே, ஆந்திர அரசு மிக்க ஒத்துழைப்பைத் தருகின்ற காரணத்தால்தான், அந்த ஆய்வு வேலைகள் முடிந்து, அதற்காக தமிழ்நாடு 54.58 இலட்சம் ரூபாய் தரவேண்டும் என்று அவர்கள் கேட்டு, நாமும் 41.24 இலட்சம் ரூபாய் அந்த மதிப்பீட்டு வேலைகளுக்காகக் கொடுத்து இருக்கிறோம். அடுத்து, நாம் அந்தப் பணிகளைத் தொடர வேண்டும் என்பதற்காகப் பேச்சுவார்த்தைகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன. அதிகாரிகள் மட்டத்தில் நல்ல முறையில் ஒத்துழைத்து இருப்பதால், இவ்வளவு விரைவாக அந்த ஆய்வு வேலைகள் முடிந்தது சான்றாக இருக்கிறது. ஆகவே, இத் திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, கிருஷ்ணா ஆற்று நீர் சென்னைக்குக் கொண்டு வருவதற்காக 188 கோடி ரூபாய் செலவாகும் என்றும், கிட்டத்தட்ட அதற்காக 55 கோடி ரூபாய் தமிழகம் கொடுத்து இருக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: 54.58 இலட்சம் என்பது ஆய்வு வேலைகளுக்காகச் செலவிடப்பட்டது. இந்த திட்ட மதிப்பீடு தண்ணீர் கொண்டு வருவதற்காகத்தான். டிஸ்டிரிபியூஷன் இதிலே வராது.

திரு. ப. நெடுமாறன்: இதிலே தமிழகத்தின் பங்காக எவ்வளவு தொகை அளிக்கப்படுகிறது? இதிலே ஆந்திர மாநில எல்லையில் இருந்து, தமிழ் நாடு எல்லை வரை அது பாசனக் கால்வாயாக வருகிறது. ஆனால் தமிழகத்திலே வரும்போது, அது சென்னைக்கு குடிநீர் கால்வாயாகத்தான் வருகிறது. இதன் மூலம், மேலும் 15 டி.எம்.சி. கூடப்பெற்றால் செங்கல்பட்டு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் புதிய பாசன வசதி பெறும். ஆகவே, அதைப் பாசனக்கால்வாயாகக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவது என்பதே பெரிய கஷ்டமான காரியம். அப்படி இருக்கும்போது, பாசன வசதிக்காகவும் அதைச் செய்யவேண்டும் என்று சொல்லி வருவதையும் நிறுத்தி வைக்கும் முறையில் பேச வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே தங்களுடைய கருத்தைத்தான் நானும் சொல்லலாம் என்று இருந்தேன். 15 டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கொடுத்தால் போதும் என்ற முறையில் இந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்ற இருக்கிறோம். நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையில், 188 கோடி ரூபாய் இதற்காகச் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டு இருக்கிறது. ஆந்திராவைப் பொறுத்தவரையில் அவர் களுக்குத் தனியாகச் செலவாகலாம். நம்முடைய மாநிலத் தப் பொறுத்தவரையில் நாம் இந்த மதிப்பீட்டைச் செய்து இருக் கிறேம். அந்த அடிப்படையில் இந்த வேலைகள் விரைவில் முடிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடுமுடியாறு அணைத் திட்டம்.

* வினா எண். 730—திரு. என். எஸ். வி. சித்தன்: திரு. ரா. உமாநாத்: திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வள்ளியூர் கொடுமுடியாறு அணைத்திட்ட வேலைகள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள் ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) (ஆ): இந்த நீர்த் தேக்கத்திட்டத்திற்காக கிடைக்கக்கூடிய நீரின் அளவை சரியாக கணித்து, திட்டத்தில் சாத்தியக்கூறுகளையும், சரியான வடிவமைப்பையும் நிர்ணயிக்க அறிக்கை அனுப்பும்படி தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கேட்டுக்கொள்ளப்பட்டார். மேற்படி அறிக்கை 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பின் அரசிற்கு அனுப்பி வைக்கப்படும் என தலைமைப் பொறியாளர் (ஆய்வு) கூறியுள்ளார்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொடுமுடியாறு திட்டத்திற்காக இதுவரையில் 30 இலட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. மூன்று ஆண்டு கால நீர் கணக்கை எடுத்துப் பார்த்து, கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அறிக்கை மிக விரைவில் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டு அங்கேயுள்ள இயந்திரங்கள் அகற்றப்பெற்றபோது, அங்கே ஒரு